**கவனிக்க .-** *2014.12.05 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1893 - 2014 දෙසැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2014.12.12

*1893 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2402 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, சனவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

வடமத்திய மாகாணம்

வடமத்திய மாகாண அரசாங்க சேவைக்குரிய தொழில்நுட்ப சேவையில் குடியேற்றத்திட்ட அலுவலர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்தல் - 2014

வடமத்திய மாகாண அரசாங்க சேவைக்குரிய தொழில்நுட்ப சேவையில் தரம் III குடியேறற்றத்திட்ட அலுவலர் பதவியை நிரப்புவதற்காக வடமத்திய மாகாணத்தில் வதியும் தகைமையுள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பொதுத் தகைமைகள்.-**

1.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

1.2 விண்ணப்பதாரி வடமத்திய மாகாண அதிகாரப்பிரதேசத்தில் விண்ணப்பம் கோரப்படும் இறுதித்தினத்திற்கு கிட்டிய மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக வதிவைக் கொண்டிருக்க வேண்டும் ;

1.3 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்திற்கு 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

1.4 சிறந்த உடல் உள ஆரோக்கியமும், சிறந்த நடத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

2. **கல்வி மற்றும் தொழில்நுட்பத் தகைமைகள்.-** சகல கல்வி மற்றும் தொழில்நுட்ப தகைமைகள் 2015.01.12 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் செல்லுபடியாகக் கூடியதாக இருக்க வேண்டும்.

2.1 (அ) விவசாய விஞ்ஞானம், உயிரியல், பௌதிகவியல், விலங்கியல் ஆகிய பாடங்களுள் உரிய துறைக்குப் பொருத்தமான இரண்டு பாடங்களுடன் 3 விஞ்ஞான பாடங்களில் ஒரே தடவையில் க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் க. பொ. த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் அல்லது ஆங்கில இலக்கியம்/கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னொரு பாடத்தில் திறமைச்சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

மற்றும்

(ஆ) மேலே (அ) இல் உள்ள அடிப்படைக் கல்வி தகைமைகளுடன் கீழ்வரும் தொழில் தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) குண்டசாலை, அக்குணகொலபலஸ்ஸ, பெல்வெகர, பிபிலை, லபுதுவ, வாரியபொல, வவுனியா, அனுராதபுரம் ஆகிய ஏதாவதொரு விவசாயக்கல்லூரியில் விவசாயம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழை பெற்றிருத்தல்

அல்லது

(ii) ஹாடி தொழல் நுட்பக்கல்லூரியில் விவசாயம் தொடர்பான சான்றிதழைப் பெற்றிருத்தல்

அல்லது

(iii) அக்வைனஸ் கல்லூரியில் விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்

அல்லது

(iv) அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட இரு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.

3. **சம்பள விபரம்.-**

1. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 6/2003 (iv) இல் MN - 3 - 2006 (A) இற்கு ஏற்ப, வடமத்திய மாகாண அரச சேவைக்குரிய தொழில்நுட்ப சேவையில் குடியேற்றத்திட்ட அலுவலர் சேவைக்குரிய சம்பளத்திட்டம் ரூபா 15,005-4×180-6×240-11×320-20×360-27,885-(MN3-2006A)

4. **ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்.-** வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

5. **ஆட்சேர்ப்பு முறை.-** அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 15/90 இன் ஏற்பாடுகளுக்கேற்ப மாவட்ட சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்றவாறு மேற்கூறப்பட்ட வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படும். இதற்காக வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின்னர் தகைமையுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. எழுத்துப்பரீட்சையில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் அதி குறைந்த புள்ளியாக 40% த்தைப் பெற்றுக் கொள்ளாத விண்ணப்பதாரிகள் ஆட்சேர்ப்பதற்காக கருத்திற் கொள்ளப்படமாட்டார்கள்.

6. **சேவை நிபந்தனைகள்.-**

6.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியமுடையது ;

6.2 நியமனம், அரச மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 01/2014 இன் ஏற்பாடுகளுக்கு அமைவானது ;

6.3 இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின் வடமத்திய மாகாணத்தில் ஆகக்குறைந்தது 5 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்ற வேண்டும். இக்காலத்தில் வடமத்திய மாகாணத்திற்கு வெளியால் இடமாற்றம் தொடர்பாகவோ, அல்லது வேறு பதவிகளுக்கு விடுவிக்குமாறோ, வைக்கப்படுகின்ற எந்த கோரிக்கைகளும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

7. **விண்ணப்பிக்கும் முறை.-**

7.1 பரீட்சைக்கட்டணம் 600 ரூபா ஆகும். இப்பரீட்சைக்கட்டணத்தை வடமத்திய மாகாணத்திலுள்ள எந்தவொரு பிரதேசச் செயலகத்திலாவது செலுத்தி பெற்றுக்கொள்ளப்படும் என்சீ 100 பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்ட வேண்டும். அப்பற்றுச்சீட்டு இல்லாமல் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் செலுத்தப்படமாட்டாது ;

7.2 விண்ணப்பப்படிவத்தை இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப திருத்தமாக நிரப்பி 2015.01.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, வடமத்திய மாகாணம்'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "வடமத்திய மாகாண அரசாங்க சேவைக்குரிய, தொழில்நுட்ப சேவையில் குடியேற்றத்திட்ட அலுவலர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் 2014" எனவும், மாவட்டத்தையும் குறிப்பிட வேண்டும். குறித்த தினத்திற்கு பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள், பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பாக ஆணைக்குழு பொறுப்பேற்காது.

8. **பரீட்சை ஊடக மொழி.-** பரீட்சை சிங்களம், தமிழ் மொழிகளில் நடைபெறும். விண்ணப்பப்படிவத்தில் தான் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திற்குரிய இலக்கத்தை தெளிவாக குறிப்பிட வேண்டும். பின்னர் மொழிமூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9. **பரீட்சை நிலையம்.-**

பரீட்சை நிலையம் தொடர்பாக வடமத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் மூலம் அறியத்தரப்படும்.

10. **பரீட்சை பாடத்திட்டம்.-**

1. **நுண்ணறிவு.-** நேரம் 1 மணித்தியாலம் (100 புள்ளிகள்) இவ்வினாப்பத்திரம் விண்ணப்பதாரியின் தர்க்கசிந்தனை, பகுப்பாய்வுத்திறன், நேரமுகாமைத்துவம் என்பவற்றைக் கண்டறிவதற்கான வினாக்களைக் கொண்டது.

2. **தொழில்நுட்ப வினாப்பத்திரம்.-** நேரம் 3 மணித்தியாலம் (100 புள்ளிகள்) பதவிக்கு ஏற்ற தொழில்நுட்ப அறிவை அறிந்து கொள்வதற்கான பல்தேர்வு மற்றும் கட்டமைப்பு வினாக்களைக் கொண்டது.

பாடத்திட்டம் கீழ்வருமாறு :

(I) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக, விவசாயத்தின் பங்களிப்பு
- (i) தேசிய உற்பத்திக்கு விவசாயத்தின் பங்களிப்பு
- (ii) தொழில் வாய்ப்பு
- (iii) விவசாய ஏற்றுமதி, இறக்குமதி நிலைமை

(II) இலங்கையின் காலநிலை வலயங்கள் பற்றிய அறிவு

(III) மண்ணும், தாவரப் போசணையும்
- (i) மண்ணின் கட்டமைப்பு, இழையமைப்பு, பௌதிக, இரசாயண அயன் தன்மை, பயிர் செய்கையில் இவற்றின் பங்களிப்பு
- (ii) தாவரப் போசணை, மண் தாவரப் போசணை முகாமைத்துவம்
- (ii) தாவரப் போசணை தொடர்பான விஷேட விடயங்கள்

(IV) மண் இரசாயனம், மண்பாதுகாப்பின் முக்கியத்துவம், மண் பாதுகாப்பு முறைகள்

(V) நீர்ப்பாசன முறைகள், நீர் முகாமைத்துவம்
- (i) வெவ்வேறு பயிர் வகைகளுக்குப் பொருத்தமான நீர் முகாமைத்துவம்
- (ii) நுண் நீர் முகாமைத்துவ முறைகள்
- (iii) நீர்பாய்ச்சுதலும், அதன் முக்கியத்துமும்

(VI) இலங்கையின் குடியேற்றத்திட்டங்கள் மற்றும் மகாவலித்திட்டம் தொடர்பான அறிவு
- (i) குடியேற்றத்திட்டங்கள் அமைக்கப்பட்ட இடங்கள்
- (ii) மகாவலித்திட்டத்தில் அடங்கும் பிரதேசங்கள்

(VII) காணிப்பாவனைத்திட்டம் தயாரித்தல் தொடர்பான அறிவு

(VIII) வரைபடங்கள் தொடர்பான அறிவு
(i) அனிலமானி, டம்பிளவலய, நியோடர் லைட்டர் (விகோனமானி)
(ii) 1:50,000 1 :10,000 அங்குல வரைபடங்கள் மற்றும் இறுதி கிராம வரைபடங்கள் தொடர்பான விபரங்கள்

(XI) இலங்கையில் தற்போது காணப்படும் காணியுடன் தொடர்பாக, திணைக்களங்கள், நிறுவனங்கள் தொட்ர்பான அறிவு.
காணிகளின் வகைகள் : அரச காணிகள்
தனியார் காணிகள்
பரம்பரையான காணிகள்

(X) காணி அபிவிருத்தி மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான அறிவு
(i) தற்போது காணி அபிவிருத்தி மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் தேசிய வேலைத்திட்டம் தொடர்பான அறிவு
- காணி இல்லாதவர்களை இனங்காணல்
- பிம் சவிய வேலைத்திட்டம்
- ஒரு இலட்சம் காணித்துண்டுகள் வேலைத்திட்டம்

(XI) அரசர் காலத்திலிருந்து தற்போது வரை காணிகளின் உரிமைகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் தொடர்பான அறிவு
(i) உரிமைப்பத்திரம், (சன்னஸ்) நிந்தகம், வரிப்பத்திரம், ஸ்வர்ணபூமி, ரத்னபூமி, ரன்பிம)

11. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் :- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப யு4 அளவான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி முதலாவது பக்கத்தில் 1-5 வரையான விடங்களையும் மற்றைப்பக்கங்களில் மீதப் பகுதிகள் அடங்கக்கூடியவாறும் விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவம் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாகவோ இருக்கலாம். விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது பின்வரும் குறியீடுகளை உரிய கூடுகளினுள் இடப்படவேண்டும்.

11.1 விண்ணப்பிக்கும் மாவட்டம், விண்ணப்பதாரி நிரந்தரமாக வதியும் மாவட்டமாக இருத்தல் வேண்டும்.

மாவட்டத்திற்குரிய குறியீடு

| | |
|---|---|
| அனுராதபுரம் | 01 |
| பொலன்னறுவை | 02 |

விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தரிசு அல்லது 2,40,360 ரூபாவிற்கு மேற்பட்ட வருடாந்த அடிப்படை சம்பளம் பெறும் அரச/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியில் இருக்கும் அலுவலர் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

11.2.1 ஏதாவதொரு விண்ணப்பதாரி தகைமையற்றவர் என நியமனம் பெறுவதற்கு முன் அல்லது நியமனம் பெற்ற பின் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தெரியவரின் அவரின் விண்ணப்பத்தகுதி அல்லது நியமனம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறு தெரிந்து கொண்டே பொய்யான தகவல்கள் தரப்பட்டுள்ளன எனவோ அல்லது வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளன எனவோ தெரியவரின் சேவையிலிருந்து நீக்கப்படுவர்.

11.2.2 அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருப்பவர்கள் தமது விண்ணப்பத்தை திணைக்களத் தலைவரின் ஊடாக முன்வைக்க வேண்டும்.

12. இப்பரீட்சையை நடாத்துவது அல்லது நடாத்தப்பட்ட பின் தேர்ந்தெடுப்பது/தேர்ந்தெடுக்காமல் விடுவது, வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பான இறுதித்தீர்மானம் வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியது. அவ்வாறே, இவ்வறிவித்தலில் உள்ள ஏதாவது ஏற்பாடுகள் தொடர்பான விளக்கங்கள்/தீர்மானமெடுத்தல் வடமத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

ஆர். எம். வன்னிநாயக்க,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
வடமத்திய மாகாணம்.

மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
வடமத்திய மாகாணம்,
2014, நவெம்பர் 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமத்திய மாகாண அரசாங்க சேவைக்குரிய தொழில்நுட்ப சேவையில் குடியேற்றத்திட்ட அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2014**

பரீட்சை சுட்டெண் ☐
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
(உரிய குறியீட்டை கூட்டினுள் இடுக.) ☐
(சிங்களம் S, தமிழ் T)

1. வதியும் மாவட்டம் ☐ மாவட்டத்திற்குரிய குறியீடு ☐

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(திரு./திருமதி/செல்வி ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)
1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் திரு./திருமதி/செல்வி (சிங்களம்/தமிழில்):----.
1.3 முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்):----.
1.4 முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களம்/தமிழில்):----.
2. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.2 அனுமதியட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 அனுமதியட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
2.4 தற்போது அரச சேவையில் உள்ளவராயின் அலுவலக முகவரி :----.
2.5 தொலைபேசி இலக்கம் :----.
3. 3.1 பிறந்த திகதி :----.
3.2 விண்ணப்ப இறுதி திகதிக்கு (2015.01.12 அன்று வயது :- வருடங்கள் :-----, மாதங்கள் :-----. நாட்கள் :----.
3.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐
4. ஆண்/பெண் தன்மை :-----.
5. நிரந்தர வதிவிடம் தொடர்பான விபரம் :-
5.1 விண்ணப்பதாரியின் நிரந்தர வதிவிட மாவட்டம் :----.

| தேர்தல் இடாப்பின் படி பதிவிலக்கம் | 2012 | 2013 | 2014 முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட கிராம அலுவலர் பிரிவில் 2014 ஆம் ஆண்டிற்காக விண்ணப்பித்துள்ளீரா? ஆம்/இல்லை |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| வாக்கெடுப்பு பிரதேசம் | | | |
| வாக்கெடுப்பு பிரிவு | | | |
| கிராம அலுவலர் பிரிவும் இலக்கமும் | | | |
| வீட்டு இலக்கம் | | | |
| பெயருக்கு முன்னால் உள்ள இலக்கம் | | | |

6. கல்வித் தகைமை :----.

6.1 க. பொ. த. (சா/த) பரீட்சை (சான்றிதழ்களின் நிழற்பிரதியை இணைக்கவும்)
வருடம் :----. பரீட்சை சுட்டெண் :-----.

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

6.2 க. பொ. த. (உ/த) பரீட்சை (சான்றிதழ்களின் நிழற்பிரதியை இணைக்கவும்)

வருடம் :----. பரீட்சை சுட்டெண் :-----.

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

7. தொழில் நுட்ப தகைமை (சான்றிதழ்களின் நிழற்பிரதியை இணைக்கவும்)

| நிறுவனம் | கற்ற பாடநெறி | காலம் | பெறுபேறு | சான்றிதழின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |

8. வேறு தகைமைகள் :----.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரம்:-

1. பரீட்சைக்கட்டணம் செலுத்திய பிரதேச செயலகத்தின் பெயர் :----.
2. திகதி :----.
3. பற்றுச்சீட்டு இலக்கம் :----.

பற்றுச்சீட்டை இங்கு கழறாதவாறு ஒட்டவும்.

**விண்ணப்பதாரியின் உறுதியுரை** : இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும், திருத்தமானவையும் என உறுதியளிக்கின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனத் தெரியவரின் நான் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமையற்றவன் எனவும் நியமனம் கிடைத்ததன் பின் அவ்வாறு தெரியவரின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உள்ளாவேன் என்பதை நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பத்தாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இவ்விண்ணப்பப்படிவத்தை முன்வைக்கின்ற திரு./திருமதி/செல்வி ................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் இன்று என் முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் உறுதியளிக்கின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.
உறுதிப்படுத்துவரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.

10. அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்போது பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகள் எனின் கீழ்வரும் உறுதிச்சான்றிதழ் நிறுவனத்தலைவரினால் வழங்கப்பட வேண்டும்.

இவ்விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி............................. என்பவர் இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ............. ஆக சேவையாற்றுகிறார். கடந்த 5 வருட காலத்தில் அவர் எவ்விதத்திலும் ஒழுக்க ரீதியான தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர) உட்படவில்லை எனவும் மேற்கூறப்பட்ட பதவிக்கு தெரிவு செய்யப்பட்டிருப்பின் அதற்காக அவரை விடுவிக்க முடியும் எனவும் உறுதியளிக்கின்றேன்.

-----,
திணைக்கள/நிறுவனத்
தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

திகதி :-----.

12-268